1971 டிசம்பர் 18]

கோடாறம்குளம் பஞ்சாயத்துக்குட்பட்ட ஆதீன நிலங்கள்

* *567* **வினு—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

திருநெல்வேலி மாவட்டம், கோடாறம்குளம் பஞ்சாயத்திற் குட்பட்ட ஆதீன நிலங்களில் ஒருபோக நிலங்களை இருபோகமாகப் பயிர் செய்வதற்கு வாட்டர் ரேட் தெண்டத் தீர்வை வசூலிக்கப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். மணிமுத்தாறு நீர்த்தேக்க பாசனத்தின் தண்ணீர்த் தீர்வை விதிகள், 1967-ன்படி ஒருபோக நஞ்சை நிலத்தில் உத்தரவின்றி இருபோகம் பயிர் செய்தால் அது முறையற்ற பாசனமாகக் கருதப்பட்டு மேற்படி விதி எண் 5-ன்படி தண்ணீர் தீர்வை விதிக்கப்படும். ஆனல் மேற் படி நிலத்தில் இருபோகம் பயிர் செய்ய அனுமதி அளிக்கப்பட்டால், பசலி ஜாஸ்தி தீர்வை மட்டும் விதிக்கப்படும். கோடாறம்குளம் கிராமத்தில் உள்ள ஒருபோக நஞ்சை நிலங்களில் இருபோகம் விளைவிக்க எதும் அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆகவே அம்பா சமுத்திரம் வட்டாட்சியர் ஒருபோக நஞ்சை நிலங்களில் இரு போகம் விளைவித்ததை முறையற்ற பாசனமாகக் கருதி மணி முத்தாறு நீர்த்தேக்க பாசனத் தண்ணீர் தீர்வை விதிகளின்படி தண்ணீர் தீர்வை விதித்திருப்பது சரியே.

சேலம் உருக்காலை

* *568* **வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா :—

சேலம் உருக்காலை எப்போது உற்பத்தி துவங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விரைவில் தொடங்க மத்திய அரசு எற்பாடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, சேலம் இரும்பு ஆலைத் திட்டம் நாம் நீண்டகாலமாகக் கேட்ட திட்டம். பல ஆண்டுகளாக அது துவக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். ஒரு காலவரை வரையறுக்கப்பட்டு, மத்திய அரசை வற்புறுத்த நமது அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்போதைக்கு அப்படிப்பட்ட சந்தேகம் எற்பட வாய்ப்பில்லை. காரணம், நிலத்தைப் பொறுத்த அளவுக்கு, சுமார் 2,000 எக்கர் நிலங்களை நாம் இதற்காக ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று அனுமதி தந்திருக்கிறார்கள். எந்தவிதமான உருக்குப் பொருள் உற்பத்தி செய்வது என்பதைப்பற்றி மட்டும்தான் (பிராடக்ட் மிக்ஸ்) மத்திய அரசு முடிவு எடுக்கவேண்டிய நிலை இருக்கிறது.